**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 80/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(மருதுபாண்டி)**
**5.3.2024.**

**5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம். 5 ம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் அவர் தாவா சொத்தில் கிரையம் வாங்கியுள்ளார். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 7 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எந்தெந்த அயிட்ட சொத்துக்கள் எந்தெந்த ஆண்டு எனது அப்பா மற்றும் 1 ம் பிரதிவாதியின் கூட்டு உழைப்பின் மூலம் பூர்வீக சொத்தின் வருமானத்தை கொண்டு முருகன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். முருகன் 1984 ல் இறந்துவிட்டார். எனக்கு 40 வயதாகிறது. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களா அல்லது கிரையம் வாங்கப்பட்டவையா என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா 2009 ல் இறந்தார். 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் 2003 ல் கிரையம் வாங்கியுள்ளார். எந்த அயிட்ட சொத்து என்று பார்த்துதான் சொல்லமுடியும். எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு தெரியாமல் வாங்கிவிட்டார்கள். எனது அப்பாவிற்கு எப்போது தெரியவந்தது என்றால் கிரையம் கொடுத்து 2 வருடங்களில் தெரியவந்தது. 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் கிரையம் வாங்கிய விவரம் 2005 ம் ஆண்டே எனக்கும் எனது தகப்பனாருக்கும் தெரியும் என்றால் சரிதான். 2003 ம் ஆண்டு முதல் அவர்கள் தான் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். 2003 பிரதிவாதியின் தகப்பனார் கிரையம் வாங்கியபோது அவரும் அவருக்கு பிறகு அவரது வாரிசுகளும் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். எனக்கு தெரிய 20 ஆண்டுகளுக்கு மேலாக 5 ம் பிரதிவாதி வகையறாதான் அவர்கள் கிரையம் வாங்கிய சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த கிரையம் செல்லாது மற்றும் எங்களை கட்டுப்படுத்தாது என வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். அமராவதி மற்றும் மாரியம்மாள் ஆகியோர் எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். பூர்வீக சொத்தில் பாகம் கேட்டுதான் வழக்கு தாக்கல்செய்துள்ளோம் என்றால் சரிதான். அமராவதி மற்றும் மாரியம்மாளை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அமராவதி மற்றும் மாரியம்மாள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றும் அவர்களை சேர்க்காத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதியை பொருத்து வழக்கில்

எவ்வித பரிகாரமும் கேட்காத காரணத்தால் அவர் அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. தாவா 3 வது அயிட்ட சொத்தை 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் 23.6.2003 ம் தேதி குளத்துூர் சார்பதிவக ஆவண எண் 742/2003 ஆக பதிவுற்ற கிரையமாக வாங்கி எனக்கு நன்கு தெரிய மேற்படி சொத்தில் சட்ட காலத்திற்கு மேலாக உரிமையாளர்களாக அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சட்ட காலம் கடந்து வழக்கு தாக்கல்செய்துள்ளதால் இவ்வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 3 அயிட்ட சொத்தில் நாங்கள் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதால் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றும் அதனால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதியை பொருத்து எவ்வித வழக்குமூலமும் சொல்லப்படாத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியிடமிருந்து தாவா 3 வது அயிட்ட சொத்தை 5 ம் பிரதிவாதியின் தகப்பனார் தகுந்த மறுபயனுக்கு கிரையம் பெற்றுள்ளதால் ஒருவேளை தாவா சொத்துக்களில் எங்களுக்கு பாகம் உள்ளது என நீதிமன்றம் கருதும் பட்சத்தில் 1 ம் பிரதிவாதியின் பாகத்தை தகைமை அடிப்படையில் 5 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் 5 ம் பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்கும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

**(7,8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**